தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1978 செப்டம்பர் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை **மண்டபத்தில்** பிற்பகல் 4 மணியளவில் மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Bamboo cultivation in Kolli Hills.

* 31 *Q.*—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) the extent of land in which bamboos are cultivated in Kolli Hills till now ;

(*b*) whether there is any proposal to cxpand the scheme ; and

(*c*) if so, the details thereof ?

கொல்லி மலையில் விளைவித்தல்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு செய்தி, இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கொல்லி மலையில் இதுவரை மூங்கில் எத்தனை ஏக்கரில் விளைவிக்கப்படுகிறது ?

(இ) இதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) 374.53 ஹெக்டேர் நிலப் பரப்பில் விளைவிக்கப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 374 ஹெக்டேரில் விளைவிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்த நிலங்கள் பூராவும் காட்டு இலாகாவைச் சேர்ந்ததா அல்லது ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த நிலங்களும் அதிலே அடங்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : காட்டிலாகா நிர்வாகப் பொறுப்பில் பயிரிடுகின்ற விவரம்தான் இது என்று கருதுகிறேன். அது தவிர வேறு விவரங்கள் இங்கே இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 374 ஹெக்டேரில் பயிரிடப்படுவதாகவும், அதை மேலும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லையென்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்று நாட்டில் காகிதப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. காகிதம் தயாரிப்பதற்கான அடிப் படைப் பொருளாக இருக்கும் மூங்கிலை வளர்க்க இப்போது செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இல்லையென்றாலும், அரசாங்கக் காடுகளில் அதிகமாக மூங்கிலை உற்பத்தி செய்ய அரசாங்கம் தீவிர முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இது சம்பந்தமாக சேலம் வனச் செயல் திட்டத்தைத் திருத்தி அமைத்திருக்கும் வனச் செயல் அலுவலர் கொல்லி மலைக் காடுகளில் மேலும் மூங்கில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. எம். சங்கரலிங்கம் : மூங்கில், காகிதம் உற்பத்தி செய்வதற்கு மட்டுமல்லாமல், ஏழை மக்கள் குடிசை கட்டுவதற்குக் கம்பாகப் பயன் படுகிறது. இப்போது மூங்கில் கம்பு ஒன்று 10 ரூபாய் அளவிற்கு விற்கிறது. எனவே மூங்கில் வளர்ச்சித் திட்டத்தை மாநிலம் பூராவும், எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம் வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? மூங்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாகக் கிடைத்து வந்தது. இப்போது அவை அழிக்கப்பட்டு, அந்த நிலங்களில் ரப்பர் பயிரிடப்படுகிறது. ரப்பர் பயிருக்கு வசதியில்லாத இடங்களில் மூங்கில் பயிரிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்தத் திட்டம் அரசாங்கத்தி னுடைய வனத் துறையின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : கொல்லி மலையில் 374 ஹெக்டேரில் மூங்கில் வளர்ப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த மூங்கிலை அரசாங்கமே அறுவடை செய்து, வெளி இடங்களுக்கு அனுப்புகிறதா? அல்லது கான்ட் ராக்ட் முறையில் விடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கேட்கப்பட்டிருக்கும் கேள்வி மூங்கில் வளர்ப்பைப் பற்றியது. மேற்கொண்டு விவரங்கள் இல்லை. என்றாலும் இது சம்பந்தமாக எனக்குத் தெரிந்த மற்ற குறிப்புகளைக் கூறுகிறேன். அரசாங்கத் தோட்டங்களிலே இருக்கும் மூங்கில்கள் தனியாருக்குக் குத்தகை என்ற பெயரில் விடப்பட்டால், அவற்றைத் தனியார் வெட்டு கிறார்கள். இல்லையென்றால், காகிதம் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு வெட்டு கிறார்கள் என்பது இருக்கும் நிலைமை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மூங்கில் அநேகமாகக் காடுகளில் வளர் கிறது. இது திட்டமிட்டு வளர்க்கப்படுகிறதா? அல்லது தானாக வளர் கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதுவரை திட்டமிட்டு வளர்க்கப் படுவதாக விவரமில்லை. இனிமேல் அதற்கான முயற்சிகளை ஆராய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Filmotsav Film Festival

* 32 *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state the expenditure met by the Tamil Nadu Government out of the expenses for Filmotsav Film Festival held in Madras City, during January, 1978?

சர்வதேச திரைப்பட விழா

திரு. கு. மா. பாலசுப்ரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு செய்தி, இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினா விற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் சென்னையில் நடைபெற்ற சர்வ தேச திரைப்பட விழாவிற்கான செலவில், தமிழ்நாடு அரசு எவ்வளவு தொகை ஏற்றுக்கொண்டது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தமிழ்நாடு அரசு ரூ. 1,56,000 செலவை ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. கு. மா. பாலசுப்ரமணியம்: விழாவிற்கான இவ்வளவு தொகையை தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொண்டிருந்தும்கூட, இந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனிச் சலுகை காட்டி, டிக்கட்டுகள் அளிக்கப்படவில்லை.